திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 கிராமங்களிலும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக போர் வெல் போட்டு பார்த்ததில் சரியான நல்ல தண்ணீர் இல்லாததன் காரணமாக 8 மைலுக்கு அந்தப் பக்கத்திலே இருந்து தண்ணீர் கொண்டு வருவது பற்றி ஆராய்ந்து அதுவும் சரியான தண்ணீராக இல்லாத காரணத்தால் அந்த மக்களுக்கு சரியான குடி தண்ணீர் கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே எட்டையாபுரம் வரை வருகின்ற தாமிரபரணி தண்ணீரை இந்தக் கிராமங்களுக்குக் குடிப்பதற்கு வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையினை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கிற தகவலைச் சொல்கிறேன். இந்தத் திட்டத்திலிருந்து வழங்க எட்டையபுரம் பேரூராட்சியின் சம்மதம் கிடைக்கவில்லை என்று குறிப்பு இருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, சம்மதம் கிடைத்ததாகத் தகவல் இருந்தால், என்னிடம் பாஸ்-ஆன் செய்தால், அதன் மேல் நடவடிக்கை எடுக்கும்படி செய்யலாம். என்னிடம் இருக்கிற குறிப்பில் எட்டையபுரம் பேரூராட்சியின் சம்மதம் கிடைக்கவில்லை என்று மட்டும் தான் இருக்கிறது. இதன் காரணத்தினால், மேற் குறிப்பிட்ட சிற்றூர்களில் இருந்து 15 மைல் தொலைவில் இருக்கும் சீனியப்பட்டி என்னும் சிற்றூருக்கு அருகில் நில நீர் ஆய்வு செய்யப் பெற்று, ஆழ் துளை குழாய்க் கிணறு அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இது நல்ல தண்ணீர். இதிலிருந்து தண்ணீர் கொடுப்பதாகத் திட்டம் இருக்கிறது. மாற்று யோசனை ஏதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதையும் கவனிக்கலாம்.

கடலாடிப் பகுதியைச் சேர்ந்த கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*வினா எண் 32—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடலாடி பகுதியைச் சேர்ந்த 84 கிராமங்களுக்கு கூட்டு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை?

(ஆ) திட்டமிட்டபடி தண்ணீர் எடுக்க சாத்தியக்கூறு உள்ளதா?

(இ) இல்லையெனில் மாற்றுத் திட்டம் ஆய்வில் உள்ளதா?

1981 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ) மற்றும் (இ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி மற்றும் கமுதி ஒன்றியங்களைச் சார்ந்த 84 சிற்றூர்களுக்காக குடிநீர்த் திட்டத்திற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்தது. பொதுமக்கள் ஆட்சேபித்ததால் இத்திட்டம் தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தீர்வு கண்டபின் பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிநீர்த் திட்டத்திற்கு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து ஒதுக்கப்பெற்ற நிதி எவ்வளவு? இதுவரையில் செலவழிக்கப் பெற்ற நிதி எவ்வளவு? எத்தனை ஆண்டுக்காலமாக இது தடைபட்டு நிற்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்தில் இருக்கிற தகவல் பிரகாரம் இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூபாய் 97.36 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஒப்புதல் அளித்ததிலிருந்து இதுவரையில் எவ்வளவு செலவு ஆயிற்று என்கிற குறிப்பு இல்லை. ஆனால் எதிர்ப்பு ஏற்பட்ட காரணத்தினால்—அதாவது அந்தப் பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததினால், 1980 பிப்ரவரியில் காவல் துறையினரின் தகுந்த பாதுகாப்புடன் ஆழ் துளை கிணறுகள் அமைக்கப்பட்டன. இரண்டு ஆழ் துளை கிணறுகளின் மேல் கட்டப்பெற்ற நீரேற்று நிலையங்களை 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் சில நபர்களால் சேதப்படுத்தப் பெற்றது.

அந்த வேலைகள் அந்த அளவில் நிற்கின்றன. இப்பொழுது குழாய்கள் பதிக்கும் பணிகள் புதிதாகத் தொடங்கப் பெற்று, பதிக்கப் பெற வேண்டிய 1,142.60 கிலோ மீட்டரில், 90.52 கிலோ மீட்டருக்கு குழாய்கள் பதிக்கப்பெற்று விட்டன. இந்த நிலையில்தான் இப்பொழுது இருக்கிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்திற்கு ஆட்சேபணை தெரிவித்த கிராமத்தைச் சேர்ந்தவர்கள், திட்டமிட்டபடி 300 லிருந்து 600 அடி வரை ஆழத்தில் தண்ணீர் எடுத்தால் ஆட்சேபணை இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், போதுமான ரிக்ஸ்கள் இல்லாத காரணத்தால் குடிநீர் வடிகால்

[1981 ஆகஸ்ட் 24

வாரியத்தினர் 150 அடிக்குக் கீழேயே தண்ணீர் எடுத்த காரணத்தினால் தான் ஆட்சேபணை ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது, நிலத்தடி ஆய்வுக் குழுவில் இயங்கும் இயந்திரங்களில் சில 2,000 விருந்து 3,000 அடி வரை தண்ணீரை எடுக்கும் என்று தகவல் இருப்பதால், அவைகளைப் பயன்படுத்தி, இத்திட்டத்திற்குத் தண்ணீர் எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கென உள்ள வல்லுநர்களை வைத்து அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய முறைகளின் அடிப்படையில் செயல் படுத்தியிருக்கிறோம். ஒவ்வொரு பிரச்சினையிலுமே நாட்டு மக்களுக்கு ஒரு கருத்து இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேறொரு கருத்து இருக்கலாம். அமைச்சராக இருக்கும் எனக்கு ஒரு தனிக் கருத்து இருக்கலாம். ஆனால் நாம் யாருமே அத்துறையில் வல்லுநர்களாக இல்லாத காரணத்தால், அதற்கெனவே உள்ள வல்லுநர்கள் என்னென்ன பரிந்துரை செய்கிறார்களோ, அதன்படிதான் செயல்பட முடியும்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது எத்தனை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இனி எத்தனை செயல்படுத்தப் படலாமென செயற் குறிப்பு உள்ளன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுப்படையான கேள்வி. அடுத்து வினா எண் 33.

Memorandum from the Madras Beedi Workers Union.

*Q. No. 33—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Labour be pleased to State :

(a) Whether the Government have received any memorandum from the Madras Beedi Workers Union, dated 2nd March 1981;

(b) If so, the action taken by the Government?